[2016 ஆகஸ்ட் 12

64—

மருத்துவமனையை மேம்படுத்துதல்

***43—திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டிலுள்ள வட்டம் சாரா மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புதிதாக வருவாய் வட்டங்கள் உருவாக்கப்படும்பொழுது அவ்வட்டத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது வட்டம்சாரா மருத்துவமனை, வட்ட மருத்துவமனையாக உயர்த்தப்படுவது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசின் உயர்ந்த நோக்கம். அந்த வகையிலே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30–8–2015 அன்று பேர்ணாம்பட்டை புதிய தாலுகாவாக உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகையினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் நோக்கத்தின்படி, ‘யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே’ என்பதுபோல எங்கெங்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தாலுகாவைக் கொடுத்திருக்கிறதோ, அங்கெல்லாம் அந்த மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே தரம் உயர்த்தப்படும். தங்களுடைய பேர்ணாம்பட்டு மருத்துவமனையும் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சமில்லை, அமுங்குதல் இல்லை, நடுங்குதல் இல்லை, நாணுதல் இல்லை, பாவம் இல்லை, பதுங்குதல் இல்லை, ஏது நேரிடினும் இடர்படமாட்டார், அண்டம் சிதறினாலும் அஞ்சமாட்டார், கடல் பொங்கி எழுந்தாலும் கலங்கமாட்டார், யாருக்கும் அஞ்சார், எதற்கும் அஞ்சார், எங்கும் அஞ்சார், எப்போதும் அஞ்சார், கொடிய விஷம்கொண்டு குடும்பத்துடன் படமெடுத்தாலும் பயப்படமாட்டார். தனக்கு தொழில் மக்கள் சேவை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று அனுதினமும் மக்கள் பணியே தன் பணி என்று, மக்களால் அம்மா, மக்களுக்காகவே அம்மா என்று உழைக்கும் என் அன்னை தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு நகரத்தில் செயல்படும் அரசு மருத்துவமனை. . . (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள். அமைதியாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *1925 ஆம் ஆண்டு தாய்சேய் நல மருத்துவமனையாக தொடங்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு முதல் அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. அது பேர்ணாம்பட்டு நகர மக்கள் மற்றும் பேர்ணாம்பட்டு ஒன்றிய மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் சிறப்பான சேவை ஆற்றி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களால் புதிய பேர்ணாம்பட்டு வட்டம் 31–8–2015 அன்று அறிவிக்கப்பட்டது. எனவே, பேர்ணாம்பட்டு நகரத்தில் செயல்பட்டுவரும், வட்டம் சாரா மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

இன்முகத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்கும் முன்னே வாரி வழங்கிக் கொடுப்பவர் என்பதை மீண்டும் நிரூபிக்கும் வகையில் வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு வினா. குடியாத்தம் தொகுதி, பேர்ணாம்பட்டு நகரத்தில் செயல்பட்டுவரும் அரசு மருத்துவமனைக்கு C.T., M.R.I. scanning machine, Blood Testing Auto Analyser, Modern Kitchen, Modern Laundry, Male Surgical Ward, Female Surgical Ward, மருத்துவர், செவிலியர், துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது அவசியமாகிறது. அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், வருவாய்த் துறையிலே புதிய தாலுகா உருவாக்கப்படுகின்றபோது அங்கிருக்கக்கூடிய வட்டம் சாரா மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், C.T., M.R.I. போன்ற வசதிகள் வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய வேலூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியிலே அத்தனை வசதிகளும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, நோயாளிகள் பயன்பெற்று வருகிறார்கள். படிப்படியாக முதலிலே மாவட்ட மருத்துவக் கல்லூரிகள், அதற்குப் பின்னாலே மாவட்ட தலைமை மருத்துவமனைகள் C.T., M.R.I. போன்ற வசதிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் இந்த நீண்ட நாள் துயர் துடைக்கும் ஆற்றல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மட்டுமே உள்ளது.*

'நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'

*என்ற ** நிரந்தரமாக அகற்றி தமிழ் மக்களைக் காத்து,*

'வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி'

என்ற குறளின் இலக்கணமாக நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடுகள்) நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆட்சேபனைக்குரிய அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***2698—திரு. அ. ராமு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*